ART PAST PAPER
G.C.E O/L 2016 - 2019

ම.ප/ව/විපුලානන්ද දෙමළ විදුහල
ඩියනිල්ල, මඩුල්කැලේ
ம.மா/க/வ/விபுலானந்தா தமிழ் வித்தியாலயம்
டியனில்ல, மடுல்கலை
CP/K/W/VIPULANANDA TAMIL VIDHYALAYAM
DIYANILLA, MADULKELLE.

சித்திரக்கலை



கடந்தகால வினாத்தாள்கள்

க.பொ.த சாதாரண தரம் 2016 - 2019

- பகுதி I - கட்டம் கட்டமாக வினாக்கள், பிரித்து வழங்கப்பட்டுள்ளது
- பகுதி II - சமகால படங்களும் புள்ளிகள் வழங்கும் நியதிகளும்
- பகுதி III - பிரிவுகளில் உள்ள தலைப்புகளும் புள்ளிகள் வழங்கும் நியதிகளும்

Subject Teacher
D.Sridharan
Special Art Trained

www.ikeu.lk

චතු	I
சித்திரம்	I
Art	I

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை
General certificate of Education (ord. Level) Examination

43	T	I

கடந்தகால வினாக்கள் 2016 – 2019

- கீழே தரப்பட்டுள்ள ஒளிப்படத்தைப் பயன்படுத்தி 1 தொடக்கம் 5 வரையான வினாக்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புக.

2016



1. இங்கு காட்டப்பட்டுள்ள விகாரைத் தொகுதி ..... விகாரைச் சூழலில் அமைந்துள்ளது.
2. கட்டடக்கலைப் பண்புகளின் அடிப்படையில் இது ..... வகையைச் சேர்ந்தது.
3. விகாரைத் தொகுதியினுள் காணப்படும் ஓவியங்கள் ..... காலத்திற்குரியன.
4. இங்கு காணத்தக்க ஓவியங்களில் ஏழுவாரம் (சத்சத்திய) ..... என்பன முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.
5. இந்த ஓவியங்கள் நிரைகளாக வரையப்பட்டுள்ளதுடன் ..... முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

2017



1. இக்கட்டடக் கலை அமைப்பு ..... யுகத்தில் நிர்மாணிக்கப்பட்டதாகும்.

2. இது என ..... அழைக்கப்படும்.

3. இது ..... மன்னனின் ஆட்சிக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்டது.

4. இங்கு தூண்களின் நிர்மாணிப்புக்காக ..... வடிவம் மாதிரியாகக் கொள்ளப்பட்டுள்ளது.

5. இது ..... நோக்கிற்காகப் பயன்படுத்தப்பட்டது.

2018



1. இக்கட்டடக்கலை நிர்மாணிப்பு .....விகாரைப் பிரதேசத்தில் அமைந்துள்ளது.


2. இது ..... யுகத்தில், புவனேகபாகு மன்னனின் ஆட்சிக்காலத்தில் நிர்மாணிக்கப்பட்டதாகும்.

3. இந்த அபூர்வ நிர்மாணிப்பு ..... என அழைக்கப்படும்.

4. இது திராவிடக் கட்டடக்கலை நிபுணரான ..... என்ற கலைஞரால் நிர்மாணிக்கப்பட்டதாகும்.

5. நாற்றிசைகளையும் நோக்கியவாறு அமைக்கப்பட்டுள்ள நான்கு ..... மீது நான்கு பரிவார சைத்தியங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

2019



1. கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் தேவநம்பியதீஸ மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட இது ..... விகாரை எனப்படும்.

2. இவ்விகாரையும் அதில் காணப்படும் செதுக்கல்களும் ..... காலப்பகுதிக்கு உரியவையாகும்.

www.lkedu.lk

3. இங்கு காணப்படும் சதுர வடிவ கற்றகட்டுச் செதுக்கலான ..... செதுக்கலின் மூலம் குப்த கலைப் பண்புகள் சித்திரிக்கப்படுவதாகக் கருதப்படுகிறது.
4. இங்குள்ள பாறைச் செதுக்கல்களிடையே நீராடும் யானைகள், ... என்பன மிக உன்னதமான படைப்புகளாகும்.
5. இச் செதுக்கல்களில் குப்த கலை மரபும் ..... கலை மரபும் காணப்படுவதாகக் கருதப்படுகிறது.

- **6 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடையெழுதுக.**

2016

6. சைத்தியத்துடன் இணைந்ததாக அதன் நான்கு திசைகளில் ஒரே அளவினதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடக்கலை அம்சம் யாது?

.....

7. அதிகளவான ஓவியங்களை காணக்கிடைக்கும் பொலநறுவையில் அமைந்துள்ள சிலைமனை எது?

.....

8. "அளவுக்கு வெட்டுதல்", "மட்டமாகச் செதுக்குதல்" எனும் கலைநுட்பங்கள் பயன்படுத்துகின்ற கிராமியக் கைத்தொழில் எது?

.....

9. இத்தாலியின் மிலானிலுள்ள புனித மரியா டெலா கிரேசியில் டாவின்சியால் வரையப்பட்ட ஓவியம் எது?

.....

10. சாஞ்சித் தோரணம் எந்த ஆட்சிக்காலத்தின் போது நிர்மாணிக்கப்பட்டது?

.....

2017

6. தூபியொன்றைச் சுற்றி வட்ட ஒழுங்கமைப்பில் காணப்படும் கற்றூண்களைக் கொண்டு அங்கு எந்தக் கட்டடம் அமைந்திருப்பதாகக் கருதமுடியும்?

.....

7. பிரபல்யமான காட்டுன் கேலிச்சித்திரப் பத்திரமான "அப்புஹாமி" எந்தக் கலைஞரின் நிர்மாணிப்பாகும்?

.....

8. இஸ்லாமிய கலை நிர்மாணிப்புகளில் எழுத்துக்களைப் பயன்படுத்திச் செய்யப்படும் அலங்காரங்கள் எப்பெயரால் அழைக்கப்படும்?

.....

9. இறுதித் தீர்ப்பு" எனும் கதையை ஓவியமாக வடித்த இத்தாலிய ஓவியக் கலைஞர் யார்?

.....

10. பண்டைய கிரேக்கச் சிலைகளில் காணத்தக்க யதார்த்த பண்புகளை வெளிப்படுத்தும் சிந்துவெளியில் கிடைக்கப்பெற்ற சிலை யாது?

.....

2018

6. மேலைத்தேய யதார்த்தவாத ஓவியப்பாணியின் செல்வாக்கிற்கமைய நவீன விகாரை ஓவியங்களை வரைந்த முன்னோடி ஓவியக்கலைஞர் யார்?

.....

www.lkedu.lk

7. A.மார்க் என்ற கலைஞரால் கழிவுப் பொருட்களைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட சிலை என்ன பெயரால் அழைக்கப்படும்?

.....

8. பெண்களின் உருவங்களைப் பயன்படுத்தி குடமொன்றின் வடிவில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள மரபு ரீதியான அலங்கார ஆக்கம் எவ்வாறு அழைக்கப்படும்?

.....

9. "புஞ்சி சிங்ஞோ" என்ற கேலிச்சித்திர பாத்திரத்தை உருவாக்கிய கலைஞர் யார்?

.....

10. சிறிய தலையையும் எளிய அரூப வடிவங்களையும் பயன்படுத்தி சிலைகளை நிர்மாணித்த ஐரோப்பிய சிற்பக் கலைஞர் யார்?

.....

2019

6. சேனாதிலங்கார என்ற அமைச்சரின் வழிகாட்டலில், கம்பளை லங்காதிலக விகாரையை நிர்மாணித்த கட்டடக் கலைஞர் யார்?

.....

7. கே. கனகசபாபதி என்ற கலைஞரால் படைக்கப்பட்ட கோழிச்சண்டை" எனும் ஓவியம் எந்த கலை மரபை வெளிப்படுத்துகிறது?

.....

8. 43 ஆம் குழுக் கலைஞர்களைச் சித்திரிக்கும் விதத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கேலிச்சித்திரத்தை (கார்டுன்) வரைந்த கலைஞர் யார்?

.....

9. இலங்கையின் சமூகப் பின்னணியைச் சித்திரிக்கும் விதத்திலான கிறிஸ்தவ சமய நிகழ்வுகள் கண்டியில் அமைந்துள்ள எந்த தேவாலயத்தில் வரையப்பட்டுள்ளன?

.....

10. கண்டிய (மத்திய கண்டி) ஓவியப் பாரம்பரியத்துக்குரிய ஓவியங்களைக் கொண்ட மெதவல விகாரையானது எந்த விகாரைத் தொகுதிக்குரியதாகும்?

.....

- **தொடக்கம் 15 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

2016

11. அனுராதபுர ஆட்சிக்காலத்தின் மிகச்சிறந்ததொரு நிர்மாணிப்பான அவுக்கண புத்தர் சிலையினால் எடுத்துக்காட்டப்படுவது.
    1) பல்லவர்களின் கலைப் பண்புகளாகும்
    2) குப்தர்களின் கலைப் பண்புகளாகும்
    3) அமராவதி கலைப் பண்புகளாகும்
    4) மதுர கலைப் பண்புகளாகும்

12. பொலநறுவையின் "கல்விகாரை" அல்லது "உத்தரராமய"
    1) கற்குன்றொன்றினைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட விகாரையாகும்
    2) மலைக்குன்றுகளைக் குடைந்து சிலைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதோர் இடம்.
    3) நின்ற நிலை, இருந்த நிலை சிலைகளைக் காணக்கூடியதோர் இடமாகும்.
    4) நிலப்பாறையில் செதுக்கப்பட்ட நான்கு சிலைகளை காணக்கூடியதோர் இடமாகும்.

www.lkedu.lk

13. எம்பக்க கலைஞரின் செதுக்கல் கலையின் உன்னத தன்மை மிக வெளிப்படையாக தெரிவது.

1) மடொல் குருபாவ நிர்மாணிப்பின் மூலமாகும்.
2) சதுரச் சட்டகச் செதுக்கலின் மூலமாகும்.
3) பேகட செதுக்கலின் மூலமாகும்
4) சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ள கலைநுட்பத்தின் மூலமாகும்.

14. அஜந்தாவின் பத்மபாணி போதிசத்துவரின் உருவத்தின் மூலம் எடுத்துக்காட்டப்படுவது,

1) காருண்யப் பண்புடன் கூடிய இளமைப் பருவமாகும்.
2) அஜந்தா கலைஞரின் மனித உருவங்களை நிர்மாணிக்கும் ஆற்றலாகும்.
3) தேவலோகத்திலுள்ள போதிசத்துவராவார்.
4) மானிட உலகில் பிறந்த போதிசத்துவ சித்தார்த்தராவார்

15. கென்ரிமூவரின் சிலை நிர்மாணிப்புகளில்

1) பூங்கா சிலைகளுக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.
2) இயற்கையான மனித உருவம் யதார்த்தமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.
3) இயற்கைத் தன்மைக்குப் பதிலாக அரூப வடிவங்கள் பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்டுள்ளன.
4) ஊடகப் பயன்பாட்டையும் கோட்பாடுகளையும் மாற்றுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

2017

11. கம்பளை காலப்பகுதிக்குரிய கடலாதெனிய விகாரை,

1) திராவிடக் கட்டடக்கலைப் பண்புகளுக்கமைய நிர்மாணிக்கப்பட்ட பௌத்த விகாரையாகும்.
2) ஆரம்பத்தில் இந்துக் கோயிலாக இருந்து பிற்காலத்தில் விகாரையாக மாற்றப்பட்டதாகும்.
3) இந்துக்களான திராவிடக் கலைஞர்களால் நிர்மாணிக்கப்பட்டதாகும்.
4) கருங்கற்களினால் நிர்மாணிக்கப்பட்ட பௌத்த விகாரையாகும்.

12. தர்ம போதனை செய்யும் தன்மையினதாகச் செதுக்கப்பட்ட அநுராதபுர காலத்திற்குரிய புத்தர் சிலை.

1) சமாதி புத்தர் சிலையாகும்.
2) பங்குளிய புத்தர் சிலையாகும்.
3) தொலுவில புத்தர் சிலையாகும்.
4) அவுக்கண புத்தர் சிலையாகும்.

13. பொலன்னறுவையில் கிடைக்கப்பெற்ற நடராஜர் சிலையினால்,

1) நடனமாடும் கடவுளொருவர் சித்தரிக்கப்படுகிறார்.
2) சிவபெருமானின் பலமும் சக்தியும் சித்தரிக்கப்படுகிறது.
3) இறைவன் பக்தர்களின் மீது காட்டும் கருணை ஞாபகமூட்டப்படுகிறது.
4) சிவபெருமானின் தாண்டவ நடனத் தோற்றம் சித்தரிக்கப்படுகிறது.

14. "கடினமான செயல்" எனும் இந்திய காந்தாரச் சிலை.

1) யதார்த்த தன்மையுடன் வனையப்பெற்ற புத்தர் சிலையாகும்.
2) புத்த பகவானின் நலிவுற்ற உடலையும் மனவுறுதியையும் சித்தரிப்பதாகும்.
3) நலிந்த துறவியொருவரைச் செதுக்குவதற்கான கலைத்துவ முயற்சியாகும்.
4) காந்தார தேசத்தில் செதுக்கப்பட்ட யதார்த்த பூர்வமான புத்தர் சிலைகளுள் சிறப்பான தொரு நிர்மாணிப்பாகும்.

15. பிக்காசோவின் "அவிக்னோனின் யுவதிகள்" என்ற ஓவியத்தினால் வெளிப்படுத்தப்படுவது,

1) பெண்கள் ஐவரின் வாழ்க்கைத் தகவல்களாகும்.
2) பாசிலோனா நகரின் அழகிய பெண்கள் பற்றியதாகும்.
3) அழகிய பெண்களுக்கு மத்தியிலுள்ள அருவருப்பான பெண்களாவர்.
4) விலைமாதர்களின் வெளித்தோற்றமும் அவர்களின் உள்ளார்ந்த அவலநிலையுமாகும்.

www.lkedu.lk

2018

11. "பிரஸ்கோ சிகோ" என்பது
    1) ஈரச் சாந்தின் மீது வரைதலாகும்.
    2) சுண்ணாம்பு சேர்க்கப்பட்ட சாந்தின் மீது வரைதலாகும்.
    3) காய்ந்த சாந்தின் மீது வரைதலாகும்.
    4) சாந்தின் மீது சுண்ணாம்பைப் பூசி வரைதலாகும்.
12. பித்தளைப் பாண்டங்களின் நிர்மாணிப்பின்போது விசேடமான பொது விடயமாக அமைவது,
    1) வார்ப்பதன் மூலம் பாண்டங்களைத் தயாரித்தல்.
    2) தகட்டுச் செதுக்கல், தட்டுதல் மூலம் பாண்டங்களைத் தயாரித்தல்.
    3) அமிழ்த்துவதன் மூலம் பாண்டங்களை அலங்கரித்தல்.
    4) மினுக்குவதன் மூலம் பளிச்சிடும் தன்மையானதாகப் பூரணப்படுத்தல்.
13. சிந்துவெளிச் சிற்பங்களில் யதார்த்த தன்மையையன்றி கலைப்பாங்கான தன்மையை எடுத்துக் காட்டும் சிலை
    1) பூசகர் உருவம்
    2) நடனமாதின் உருவம்
    3) முண்டத்தின் உருவம்
    4) நடனத் தோற்றத்தைக் காட்டும் முண்டத்தின் உருவம்
14. எகிப்திய கலைப்படைப்புகளில் கிடைக்கப்பெறும் "ஸ்பிங்ஸ்" உருவம்
    1) எகிப்தியர்களின் வழிபட்ட சக்தி வாய்ந்த கடவுளொருவரின் சிலையாகும்.
    2) பாரா அரசனொருவனைச் சித்திரிக்கும் பிரமாண்டமானதொரு சிலையாகும்.
    3) கண்ணக்கற் துண்டுகளைப் பயன்படுத்திக் கட்டியெழுப்பப்பட்ட சிலையாகும்.
    4) பாரா அரசர்களின் வீர பராக்கிரமங்களைச் சித்திரிக்கும் கற்பனைச் சிலையாகும்.
15. இலங்கையில் ஆதிவாசிகளின் குகை ஓவியங்களில்
    1) மனிதர்களினதும் பிராணிகளினதும் உருவங்கள் குறியீட்டடிப்படையில் வரையப்பட்டுள்ளன.
    2) பிராணிகளின் உண்மையான அசைவுத்தோற்ற நிலைகள் சித்திரிக்கப்பட்டுள்ளன.
    3) அழகிய வர்ணங்களினால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.
    4) பிராணிகளைச் சித்திரிப்பதில் மாத்திரம் வரையறை பேணப்பட்டுள்ளது.

2019

11. அனுராதபுர அபயகிரி விகாரை வளாகத்தில் காணத்தக்க சமாதி புத்தர் சிலையானது
    1) கி.பி. 7ஆம் நூற்றாண்டில் செதுக்கப்பட்டதாகும்.
    2) தியான முத்திரையையும் வீராசன முறையையும் கொண்டமைந்துள்ளதாகும்.
    3) உடலோடு ஒட்டிய அலைவடிவ ஆடைச் சுருக்கத்தைக் கொண்டுள்ளதாகும்.
    4) அமராவதி பாரம்பரிய கலைப் பாணிக்கமைய செதுக்கப்பட்டுள்ளதாகும்.
12. பொலன்னறுவையில் காணப்படும் 2ஆம் சிவன் கோயிலானது
    1) தென்னிந்திய பாண்டிய கட்டடக்கலை நுட்பங்களுக்கமைய நிர்மாணிக்கப்பட்டதாகும்.
    2) கி.பி. 13 ஆம் நூற்றாண்டிற்குரிய மிகப் பழமையான கோயிலாகும்.
    3) ராஜராஜசோழனின் மனைவியின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டதாகும்.
    4) ராஜேந்திரசோழனால் தனது வெற்றியின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டதாகும்.
13. "பாறைகளில் கன்னி" எனும் லியானாடோ டாவின்சியின் ஓவியம் காணக்கிடைப்பது
    1) புனித மேரி டெலா கிரேசி தேவாலய வளாகத்தில் ஆகும்.
    2) புனித சிஸ்டைன் தேவாலயத்தில் ஆகும்.
    3) லண்டன் தேசிய நூதனசாலையில் ஆகும்.
    4) பிரான்சிலுள்ள லூவர் நூதனசாலையில் ஆகும்.

www.lkedu.lk

14. லவகூன் என்ற சிற்பத்தினால் சித்திரிக்கப்படுவது
    1) ஹெலனிஸ்டிக் காலப்பகுதிக்குரிய கலைப் பண்புகளாகும்.
    2) கிரேக்க கலைப் படைப்புகளின் அடிப்படைப் பண்புகளாகும்.
    3) மேன்மைக் காலத்திற்குரிய கலைப் பண்புகளாகும்.
    4) கிரேக்க யதார்த்த பாரம்பரியத்திற்குரிய பண்புகளாகும்.
15. பொலன்னறுவையிலுள்ள கல்விகாரை அல்லது உத்தராராமய எனப்படுவது
    1) பல்லவ செல்வாக்குடன் நிர்மாணிக்கப்பட்ட சிலைமனையாகும்.
    2) ஒத்த பண்புகளையுடைய நான்கு சிலைகளைக் கொண்டதொரு இடமாகும்.
    3) பராக்கிரமயாகு மன்னனின் காலப்பகுதியில் கற்பாறையில் நிர்மாணிக்கப்பட்ட விகாரைத் தொகுதியாகும்.
    4) மகாயான பௌத்த எண்ணக்கருவின் அடிப்படையில் கட்டப்பட்ட சிலைமனை (பட்டிமாகர) ஆகும்.

- **16 தொடக்கம் 20 வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லினதும் கருத்தை விளக்கும் வகையில் முழுமையான ஒரு வாக்கியம் வீதம் எழுதுக.**

2016

16. வக்கதெக்க : .....
    .....
17. சிகரம் : .....
    .....
18. பத்மநிதி/பதுமநிதி: .....
    .....
19. திரிபங்கநிலை: .....
    .....
20. பாய்பின்னல் கலை : .....
    .....

2017

16. வீராசனம்: .....
    .....
17. மஸ்ஜித்: .....
    .....
18. மேதிய: .....
    .....
19. அரக்கு வேலை: .....
    .....
20. சிறுபுடைப்பு: .....
    .....

2018

16. பர்ஜன்ய : .....
17. பாயம் பேஹீம் : .....
    .....
18. பக்கத் தோற்றப் பார்வை : .....
    .....
19. சிரஸ்பத்த : .....
    .....

www.lkedu.lk

20. குறுக்குச் சட்டம்/கிடையான கற்பாளம்: .....

.....

2019

16. மினாரத் : .....

.....

17. திரிங்குதலய : .....

.....

18. பன் பாய் : .....

.....

19. கோபுரம் : .....

.....

20. கோன் அரக்கு : .....

.....

- **21 தொடக்கம் 25 வரையில் தரப்பட்டுள்ள ஒளிப்படப் பகுதிகளுடனான நெருங்கிய தொடர்பைக் காட்டும் உருவை, எதிரிலுள்ள A, B, C, D, E ஆகிய உருக்களிலிருந்து தெரிவு செய்து, அதனைக் குறித்து நிற்கும் ஆங்கில எழுத்தினைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

2016

21. 



A

(.....)

22. 



B

(.....)

23. 



C

(.....)

24. 



D

(.....)

25. 



E

(.....)

www.tgedu.lk

2017

21.  (.....)

22.  (.....)

23.  (.....)

24.  (.....)

25.  (.....)

A 

B 

C 

D 

E 

2018

21.  (.....)

22.  (.....)

23.  (.....)

24.  (.....)

25.  (.....)

A 

B 

C 

D 

E 

www.slkedu.lk

2019

21.  (.....)

22.  (.....)

23.  (.....)

24.  (.....)

25.  (.....)

 A

 B

 C

 D

 E

- **26 தொடக்கம் 30 வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்திலுமுள்ள இடை வெளிக்குப் பொருத்தமான சொல் /சொற்களை இட்டுப் பூரணப்படுத்துக.**

2016

26. புதிய களனி விகாரையின் ஓவியங்களுள் புத்தரின் வாழ்வியற் சம்பவங்களைப் போன்று..... சித்தரிக்கப்பட்டுள்ளது.
27. பரணவிதான அவர்களின் கருத்துப்படி சிகிரியா ஓவியங்களில் மின்னல் பெண்ணும் ..... பெண்ணும் சித்தரிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.
28. கம்பளைக்கால பௌத்த வழிபாட்டுத்தலங்களின் நிர்மாணிப்பின் போது ..... கட்டடக்கலை நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டதாக தெரிகிறது.
29. அஜந்தா குகைகளில் பௌத்த பிக்குகளின் இருப்பிடமாக ..... மண்டபங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
30. பெண்மையின் அழகினை எடுத்துக்காட்டும் ..... சிலை கிரேக்க சிலைகளில் உன்னதமானதொரு நிர்மாணிப்பாகும்.

2017

26. நீர்வர்ண ஓவியத்தைப் பயன்படுத்தி வரையப்பட்ட "ஓட்டுக் கூளை" என்ற ஓவியம் ..... என்ற கலைஞரின் நிர்மாணிப்பாகும்.
27. டேவிட் பெயின்டர் என்ற கலைஞர் இயேசுவின் குணப்பண்புகளைக் கருப்பொருளாகக் கொண்டு ..... தேவாலயத்தில் பல ஓவியங்களை வரைந்துள்ளார்.
28. அஜந்தா ஓவியங்கள் பிரஸ்கோ சீகோ (டெம்ரா) முறையில் வரையப்பட்டுள்ளதாக ஏற்றுக் கொள்ளப்பட்டமைக்குக் காரணம், அவை ..... இன் மீது வரையப்பட்டுள்ளமையாகும்.

www.lkedu.lk

29. மைரன், பிரக்சிடெலஸ் ஆகியோர் கிரேக்கத்தில் ..... யுகத்தில் வாழ்ந்த சமகாலக் கலைஞர்களாவர்.

30. மர ஊடகத்தினால் ஆக்கப்பட்ட எம்பக்க தேவாலயம் ..... எனும் சிற்பியாலும் அவரது சீடர்களாலும் நிர்மாணிக்கப்பட்டது.

2018

26. அஜந்தாவின் 17ஆவது குகையில் காணத்தக்க சிகிரிய பெண்களை ஞாபகமூட்டும் உருவம் ..... எனப்படும்.

27. "மஹாதன" செல்வந்தரின் வீட்டில் நடைபெற்ற நடன, பாடல் காட்சியைச் சித்திரிக்கும் ஓவியத்தைத் தாழ்நாட்டு ..... விகாரையில் காணக்கூடியதாயுள்ளது.

28. கிரேக்க தத்துவவியலாளர்களின் செயற்பாங்கான தோற்ற நிலைகளைச் சித்திரிக்கும் விதமாகத் தொகுக்கப்பட்டுள்ள ர.்.பாயலின் ஓவியம் ..... எனப்படும்.

29. இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலில் காணக்கிடைக்கும், இந்து சமய இலக்கியங்களில் வரும் பல கதைச் செய்திகள் ..... கலைஞரால் ஓவியமாக்கப்பட்டுள்ளன.

30. எகிப்திய கலைப் படைப்புகளில் காணத்தக்க மரபுரீதியான பண்புகளிலிருந்து விடுபட்டு நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய இராசதானிக் காலத்தில் காணக்கிடைக்கும் பெண் சிலை ..... எனப்படும்.

2019

26. சிவபெருமானின் முன்மாதிரியாகக் கருதப்படும் "கொம்புக் கடவுளைச்" சித்திரிக்கும் முத்திரையானது ..... எனப்படும்.

27. தாமரைத் தண்டின் வடிவத்தை அழகியல் நுட்பத்துடன் பயன்படுத்தியுள்ள பொலன்னறுவைக் காலக் கலைஞர்களின் தனித்துவமான படைப்பானது ..... இல் காணப்படுகின்றது.

28. கண்டிய காலத்திற்குரிய தம்புள்ளை விகாரையின் ஓவியங்களை வரைந்த பெருமை ..... ஓவியப் பரம்பரையினருக்கு உரித்தாகும்.

29. ஐரோப்பாவின் வரலாற்றுக்கு முற்பட்ட கால ஓவியங்களிடையே 17 அடி நீளமான எருதின் உருவம் ..... குகையில் காணப்படுகிறது.

30. பொலன்னறுவை திவங்க சிலைமனையின் கருவறையில் காணத்தக்க ஓவியங்களிடையே தேவாராதனை, ... என்பன மிகப் புராதன ஓவியங்களாகக் கருதப்படுகின்றன.

- **31 தொடக்கம் 35 வரையான வினாக்களுக்கு F, G, H, I, J ஆகிய ஒளிப்படங்களை அடிப்படையாக கொண்டு விடை எழுதுக.**

2016



F G H I J

31. F எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிலையினால் பாரதத்தின் எந்தக் கலை மரபு எடுத்துக் காட்டப்படுகிறது?

.....

www.ikdu.lk

32. G எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிலையினால் சித்தரிக்கப்படுவோர் யார்?

.....

33. H எழுத்தினால் காட்டப்பட்டுள்ள "வாசிக்கும் பிள்ளை" என்ற ஓவியத்தை வரைந்தவர் யார்?

.....


34. இந்து சமயத்துடன் தொடர்புடையதொரு சம்பவத்தை எடுத்துக்காட்டும், I எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிலை எப்பெயரால் அழைக்கப்படுகிறது?

.....

35. J எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சுமன திசாநாயக்காவின் இவ்வோவியம் எதன் பொருட்டு வரையப்பட்டது?

.....

2017



F G H I J

31. ஏ. மார்க் என்ற கலைஞரின் நிர்மாணிப்பான F எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஓவியம் எப்பெயரால் அழைக்கப்படுகிறது?

.....

32. G எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிவபக்த நாயனார் யார்?

.....

33. H எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிலையில் இடம்பெற்றுள்ள இந்தியக் கலைமரபு யாது?

.....


34. I எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிங்கத்தின் உருவமானது எந்த இந்தியக் கலை நிர்மாணிப்புடன் தொடர்புடையது?

.....

35. J எழுத்தினால் காட்டப்பட்டுள்ள இயற்கைப் பண்புகளைச் சித்தரிக்கும் இச்சிலை எகிப்தின் எந்த ஆட்சிக் காலத்திற்குரியது?

.....

2018



F G H I J

www.lkedu.lk

31. F எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிவபெருமானின் துணைவியான சிவகாமசுந்தரி சிலையானது ..... என்ற பெயரிலேயே மிகப் பிரபல்யமடைந்துள்ளது.

32. G எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிலை பொலன்னறுவையில் ..... பிரதேசத்தில் காணத்தக்கதாயுள்ளது.

33. H எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ..... சிலையானது பீடியஸ்சினால் நிர்மாணிக்கப்பட்ட மிகப்பெரிய சிலையாகும்.

34. I எழுத்தினால் காட்டப்பட்டுள்ள "பெயரிடப்படாதது" எனப் பெயரிடப்பட்டுள்ள சிலையானது பேராற்றல் மிக்கவோர் இலங்கைக் கலைஞரான ..... இன் நிர்மாணிப்பாகும்.

35. J எழுத்தினால் காட்டப்பட்டுள்ள "காவற்கல்" எண்ணக்கரு பற்றிய பக்குவமான நிலையை எடுத் தியம்பும் அனுராதபுரக் காலத்திற்குரியதான இது ..... இற்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ளது.

2019


F


G


H


I


J

31. F எழுத்தினால் காட்டப்பட்டுள்ள இந்துசமயக் கடவுளின் உலோகச் சிலையானது எந்த நுட்பத்தைக் கையாண்டு உருவாக்கப்பட்டதாகும்?

.....

32. G எழுத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள இயற்கைப் பண்புகளைச் சித்திரிக்கும் காந்தாரச் சிலையானது எந்த மன்னனுடைய காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டதாகும்?

.....

33. H எழுத்தினால் காட்டப்பட்டுள்ள நீர்வர்ணச் சித்திரத்தை வரைந்த கலைஞர் யார்?

.....

34. I எழுத்தினால் காட்டப்பட்டுள்ள, தனது எஜமான் சொல்வதைக் கேட்டு எழுதத் தயாராக இருக்கும் மனிதனைச் சித்திரிக்கும் எகிப்திய சிற்பமானது எந்த ஊடகத்தால் வடிவமைக்கப்பட்டுள்ளது?

.....

35. J எழுத்தினால் காட்டப்பட்டுள்ள அஜந்தாவின் 'அப்சரா" ஓவியமானது எவ்வகை வரைதல் நுட்பத்தைக் கையாண்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளது?


.....

www.lkedu.lk

Subject Teacher
D.Sridharan
Special Art Trained

• உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வர்ண ஓவியத்தை இனங்கண்டு, அதன் கலைப் பண்புகளைப் பகுப்பாய்வு செய்யும் விதத்தில் 36 தொடக்கம் 40 வரையில் தரப்பட்டுள்ள உப தலைப்புகளுக்கமைவாக பொருளுள்ள ஐந்து வாக்கியங்கள் எழுதுக. (தனிச் சொல்லினால் விடையளித்தால் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது).

2016



36. இடம் : .....
.....
37. கலைஞர் : .....
.....
38. தொனிப்பொருள் : .....
.....
.....
39. ஒழுங்கமைப்பு : .....
.....
.....
40. உணர்வு வெளிப்பாடு: .....
.....
.....

2017



36. இடமும் கலைஞரும் : .....
.....
37. தொனிப்பொருள் : .....
.....
38. கோடுகள், வர்ணங்களின் பயன்பாடு : .....
.....
.....
.....
39. ஒழுங்கமைப்பு : .....
.....
.....
40. உணர்வு வெளிப்பாடு : .....
.....
.....

2018



36. இடமும் தொனிப்பொருளும் : .....
.....
37. கலைஞர் : .....
.....
38. ஒழுங்கமைப்பு : .....
.....
.....
39. செல்வாக்கு : .....
.....
.....
40. உணர்வு வெளிப்பாடு : .....
.....
.....

www.lkedu.lk

2019



36. கலைஞர் தொடர்பாக :.....
.....
37. கருப்பொருள் சித்திரிப்பு :.....
.....
38. ஒழுங்கமைப்பு தொடர்பாக :.....
.....
.....
39. செல்வாக்கு தொடர்பாக :.....
.....
.....
40. உணர்வு வெளிப்பாடு:.....
.....
.....

சித்திரம் பத்திரம் I

40 பல்தேர்வு வினாக்கள் உள்ளடக்கபட்டுள்ளது. இதன்பொருட்டு ஒவ்வொரு வினாவுக்கும் ஒரு புள்ளி வீதம் வழங்கப்படுகிறது. (40X1) **40 புள்ளிகள்**

நோக்கம் :

1. செய்முறையினூடாகப் பெறப்பட்ட அறிவுத் திறன், நுட்பமுறை என்பவற்றினால் போசிக்கப்பெற்ற திறன்களையும், சிறப்புத் தன்மைகளையும் பரீட்சித்து அளவிடுதல்.

2. பாரம்பரிய கலைநிர்மாண முறை, சிற்ப முறை, அலங்கரிக்கும் தன்மை, மூலப்பொருட்களின் உபயோகமும் அதனுடன் தொடர்புபட்ட பிரதேசம் பற்றி பெறப்பட்ட அறிவுத் திறனை பரீட்சித்தல்.

3. புகழ் பெற்ற கலைஞர்களையும், அவர்களது கலையாக்கங்கள் பற்றியும் அறிந்து கொள்ளுவதுடன் அவற்றின் பின்னணி ஊடாக பயன்படும் தொனிப்பொருள், ஊடகப்பயன்பாடு, நுட்பமுறை, உணர்ச்சி வெளிப்பாடு தொடர்பான மதிப்பீட்டினையும் இரசனைத் தன்மையினையும் பரீட்சித்தல்.

4. இலங்கை, இந்தியா, ஐரோப்பா தொடர்புடைய கலாச்சாரப்பின்னணி பற்றிய அறிவையும் அது தொடர்புடைய திறன்களையும் பரீட்சித்தல்.

www.ikedu.lk

Subject Teacher
D.Sridharan
Special Art Trained

වසු	II
சித்திரம்	II
Art	II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை
General certificate of Education (ord. Level) Examination

43	T	II

கடந்தகால வினாக்கள்

சுயாதீன ரேகைச் சித்திரமும் வர்ணச் சித்திர ஒழுங்கமைப்பும்

❖ உங்களுக்கு முன்னாலுள்ள பொருட் தொகுதியை நன்றாக அவதானித்து,

1. பூர்வாங்க பரும்படிப் படத்தை முதலில் வரைக. இதற்காக உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பருமட்டத் தாளைப் பயன்படுத்துக.
2. நீங்கள் காணும் விதத்தில் பொருட் தொகுதியை வரைந்து வர்ணந்தீட்டுக. இதற்காக வழங்கப்பட்டுள்ள விசேட வரைதல் தாளைப் பயன்படுத்துக.

❖ இரண்டு வரைதல்களையும் ஒன்றாக இணைத்து மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்குக. உங்கள் வரைதலை மதிப்பிடும்போது பின்வரும் விடயங்கள் கருத்திற் கொள்ளப்படும் என்பதைக் கவனத்திற் கொள்க.

சுயாதீன ரேகைக் கற்கை

1. பருமட்டத் தாளிலுள்ள பூர்வாங்க பரும்படிப் படத்தில் உரிய ஊடகத்தைக் கையாளும் திறன்

வர்ணச் சித்திரம்

2. தளத்துக்கு உகந்ததாக பொருட் தொகுதி கலைநுட்பத்துடன் ஒழுங்கமைக்கப்பட்டிருத்தல்
3. அளவிடைகள், தூரநோக்கு, முப்பரிமாண விளைவு பற்றிய விளக்கம்
4. தரப்பட்டுள்ள பொருட்களின் வெளித்தோற்றப் பண்புகளை எடுத்துக்காட்டல்
5. வர்ண ஊடகங்களைக் கையாளும் திறன்
6. பொருத்தமான பின்னணியும் ஒட்டுமொத்த நேர்த்தியும்

மிக முக்கியம்:

பொருட்களின் தொகுதி வைக்கப்பட்டுள்ள பலகையைப் பெரிய அளவில் வரையத் தேவையில்லை. பலகையின் அளவைப் பொருட்களின் தொகுதிக்குப் பொருந்தும் வகையில் சீராக மாற்றி வரைவதற்கு உங்களுக்கு அனுமதி உண்டு.

புள்ளி வழங்கும் நியதிகள்

1.	இரேகைக் கற்றலின் போது சுதந்திரமாகவும் கருத்துடனும் இரேகையை கையாளுதல் தொடர்பாக வெளிக்காட்டப்பட்ட திறன்.	05 புள்ளிகள்
2.	பரப்பினை கருத்துடன் உபயோகித்துள்ள திறன்	05 புள்ளிகள்
3.	பொருட்களின் பிரமாணம், இயல்புகளை வெளிப்படுத்தல்	05 புள்ளிகள்
4.	கோட்பாடுகளைப் பின்பற்றுதல் தொடர்பான விளக்கம் (தூரதரிசனம், முப்பரிமான இயல்பு, கண்மட்டம்)	05 புள்ளிகள்
5.	வர்ணப்பாவனையும் புறவியல்புகளையும் வெளிப்படுத்திக் காட்டல்	05 புள்ளிகள்
6.	சித்திரத்தின் பொதுவான பூரணப்பாடு	05 புள்ளிகள்
	பத்திரம் II க்கான முழுப்புள்ளிகள்	**30 புள்ளிகள்**

www.lkedu.lk


2001



2002




2003



2004



2005



2006



www.lkedu.lk

2007




2008



2009




2010



2011



2012



www.lkedu.lk

2013



2016




2017



2018



2019



www.lkedu.lk

Subject Teacher
D.Sridharan
Special Art Trained

වසු	III
சித்திரம்	III
Art	III

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை
General certificate of Education (ord. Level) Examination

43	T	III

கடந்தகால வினாக்கள் 2016 ~ 2019

பத்திரம் III "அ" சித்திர ஒழுங்கமைப்பு (படவாக்கம்)

புள்ளி வழங்கும் நியதிகள்

1.	தெரிவு செய்த தலைப்பிற்கு பொருத்தமான சூழலையும் நிகழ்வுகளையும் வெளிப்படுத்தியுள்ள தன்மை.	06 புள்ளிகள்
2.	மனித மெய்நிலைகள் பிராணிகள் உட்பட சகல வடிவமைப்புகளையும் தளத்தில் படவாக்கம் செய்துள்ள தன்மை	06 புள்ளிகள்
3.	இரேகைகள் வடிவமைப்புக்களில் காணப்படும் சிறப்புத் தன்மை	06 புள்ளிகள்
4.	வர்ண ஊடகத்தை உபயோகித்துள்ள திறன்	06 புள்ளிகள்
5.	பொதுப் பூரணப்பாடு	06 புள்ளிகள்
	பத்திரம் III "அ" பகுதிக்கான முழுப்புள்ளிகள்	**30 புள்ளிகள்**

பத்திரம் III "ஆ" அலங்கார ஆக்கம்

புள்ளி வழங்கும் நியதிகள்

1.	தொனிப் பொருளுக்கு பொருத்தமான புதிய ஆக்கச் சிறப்புடையதாக திட்டமிட்டு கொள்ளும் திறன்.	06 புள்ளிகள்
2.	பாவனைக்கு உகந்த வகையிலும் கைத்தொழிலுக்கு பொருத்தமுடையதாகவும் இருத்தல்	06 புள்ளிகள்
3.	இரேகை வடிவமைப்புக்களை கருத்துள்ள தன்மையில் உபயோகிக்கின்ற திறமை.	06 புள்ளிகள்
4.	பொருத்தமான வர்ணத் தேர்வும் உபயோகிக்கின்ற திறனும்	06 புள்ளிகள்
5.	அலங்கார அழகும் நிர்மாணிப்பின் பூரணப்பாடும்.	06 புள்ளிகள்
	பத்திரம் III "ஆ" பகுதிக்கான முழுப்புள்ளிகள்	**30 புள்ளிகள்**

பத்திரம் III "இ" கிறபிக் சித்திரம்

புள்ளி வழங்கும் நியதிகள்

1.	தலைப்புக்கு பொருத்தமான புதிய உத்திகளை பயன்படுத்தி திட்டமிடல்	06 புள்ளிகள்
2.	தொடர்பாடல் காரியத்தின் வெற்றி	06 புள்ளிகள்
3.	வடிவங்களை ஒன்றிணைக்கும் போது கலையம்சத்துடன் நிர்மாணித்தல்	06 புள்ளிகள்
4.	வர்ணத்தை தெரிவு செய்தலும் அதனை பயன்படுத்தும் விதமும்.	06 புள்ளிகள்
5.	பல்வேறுப்பட்ட அழகு பிரபல்யமான நிர்மாணத்தின் சிறப்பியல்பு	06 புள்ளிகள்
	பத்திரம் III "இ" பகுதிக்கான முழுப்புள்ளிகள்	**30 புள்ளிகள்**

www.lkedu.lk

அ, ஆ, இ ஆகிய பகுதிகளுள் ஏதேனும் ஒன்றில் இருந்து ஒரு தலைப்பை மாத்திரம் தெரிவுசெய்க.

பகுதி, அ – சித்திர ஒழுங்கமைப்பு

2016

1. ஊர்வலம் (பெரஹர) ஒன்றில் யானைகள் குழப்பமடைதல்
2. திறந்தவெளியொன்றில் மதிய உணவருந்தும் யாத்திரிகர் குழுவினர்
3. கரைக்கு வந்துள்ள படகுகள்
4. வயல் வேலையில் ஈடுபட்டிருக்கும் பெண் விவசாயிகள்

2017

1. கடற்கரையில் மீனவர்கள்
2. வீதியோர நடைபாதைக் கடையொன்று
3. அருவியொன்றில் நீராடும் பெண்கள்
4. யானைகள் கூட்டமொன்றைக் காணும் உல்லாசப் பிரயாணிகள்

2018

1. ஊர்வலமொன்றில் யானைகள் குழப்பமடைதல்
2. வீட்டில் இடம்பெறும் சமய நிகழ்வொன்று
3. மீனவர் சந்தை/நடைபாதை வியாபாரிகள்
4. நீராடும் இடமொன்றில் இடம்பெறும் நட்புறவான உரையாடல்

2019

1. மழை பெய்துகொண்டிருக்கும்போது பாடசாலைக்குச் செல்லும் மாணவர் கூட்டம்
2. கிராமியச் சந்தை நடைபாதை பழச் சந்தை
3. சிறு பிள்ளைகளுக்கான வினோத உடைப் போட்டி நிகழ்வு
4. இல்ல விளையாட்டு விழாவில் இல்லமொன்றிற்கு முன்னால் மகிழ்ச்சி ஆரவாரம் செய்யும் மாணவர்கள்

பகுதி, ஆ – அலங்கார ஆக்கம்

2016

5. மரபுரீதியான அலங்கார அலகுகளைப் பயன்படுத்தி நீள்வட்ட வடிவான பித்தளைத் தட்டொன்றைச் செதுக்குவதற்குப் பொருத்தமான அலங்காரமொன்றைத் திட்டமிட்டு, வர்ணந்தீட்டுக.
6. சீத்தைத் துணியொன்றை அச்சுப்பதிப்பதற்காகப் பரவலடையும் விதத்தில் 9X9 அங்குல அளவுடைய அலங்காரப் பகுதியொன்றை செவ்வரத்தம் மலரொன்றைக் கொண்டு நிர்மாணிக்குக. (பொருத்தமான அளவிடைக்கமைய வரையலாம்.)
7. பிராணிகளின் மூட்டற்ற உருவங்களைக் கொண்டு, பத்திக் முறையில் வர்ணமிடத்தக்க 3X2 அடி அளவிலான கிடையான சுவர் அலங்காரமொன்றை நிர்மாணிக்குக.

2017

5. சீத்தைத் துணி ஒன்றுக்கான பரவல் அலங்காரமொன்றின் 9X9 அங்குல அளவிலானதொரு பகுதியை ஐந்து இதழ்களைக் கொண்டதொரு பூ, இலை ஆகியவற்றைக் கொண்டு நிர்மாணிக்குக. பரவலடையும் விதம் தொடர்பில் கவனம் செலுத்துக.
6. மையத்திலிருந்து விரிவடைந்து செல்லும் எட்டு பக்கங்களைக் கொண்ட குடைச்சீலை ஒன்றை அலங்கரிப்பதற்கான அலங்கார ஆக்கமொன்றை நிர்மாணிக்குக.

www.lkedu.lk

7. வட்டவடிவ பித்தளைத் தட்டு ஒன்றைச் செதுக்குவதற்காக மரபுரீதியான அலங்காரங்களைப் பயன்படுத்தி அலங்காரமொன்றை நிர்மாணிக்குக.

2018

5. பிராணிகளின் எளிமையான உருவங்களைப் பயன்படுத்தி சீத்தைத் துணி அச்சிடலுக்குப் பொருத்தமான பரவல் அலங்காரமொன்றின் 9X9 அங்குலப் பகுதியொன்றை வரைந்து அழகுணர்ச்சியை ஏற்படுத்தும் விதமாக வர்ணமிடுக. அலங்காரப் பகுதி பரவலடையும் விதம் தொடர்பில் கவனம் செலுத்துக.
6. 8X6 அடி அளவான கட்டில் விரிப்பொன்றுக்கான முழுத்தள அலங்காரமொன்றை நிர்மாணிக்குக.
7. பத்திக் முறையில் வர்ணமிடத்தக்க 4 அடி உயரமும் 2 அடி அகலமும் கொண்ட சுவர் அலங்காரமொன்றை, நடனத் தோற்றத்தை வெளிப்படுத்துகின்ற இரண்டு மனித உருவங்களைப் பயன்படுத்தி நிர்மாணிக்குக.

2019

5. மரபுரீதியான தாவர அலங்காரங்களைப் பயன்படுத்தி 4 அடி விட்டத்தைக் கொண்ட வட்ட வடிவ மேசையொன்றுக்குப் பொருத்தமான சதுரவடிவ மேசை விரிப்புக்குரிய அலங்காரமொன்றை நிர்மாணிக்குக. மேசைக்கு வெளியே தொங்கியவாறு இருக்கும் பகுதி தொடர்பிலும் கவனத்திற்கொள்ள வேண்டும். (தாளுக்குப் பொருத்தமான விதத்தில் அளவிடைக்கமைய திட்டமிட்டுக்கொள்க.)
6. பிராணிகளின் வடிவங்களைப் பயன்படுத்தி, சாரம் அல்லது சேலை முந்தானைக்குப் பொருத்தமானவாறு 8 அங்குல அகலமான கரை அலங்காரமொன்றை நிர்மாணிக்குக,
7. புடவை அச்சிடலுக்குப் பயன்படுத்தத்தக்க விதத்தில் பரவல் அலங்காரமொன்றின் 9X9 அங்குலப் பகுதியொன்றை அலங்காரங்களைக் கொண்ட கேத்திரகணித வடிவங்களைப் பயன்படுத்தி நிர்மாணிக்குக. (அலங்காரப் பகுதியின் அளவு, பரவலடையும் விதம் என்பன தொடர்பில் கவனம் செலுத்துக.)

பகுதி, இ – கிறபிக் சித்திரம்

2016

8. "என் மனங்கவர் ஓவியர்" என்ற சுயசரிதை நூலொன்றுக்கான அழகிய மேலட்டையொன்றை நிர்மாணிக்குக.
9. ஆயுர்வேத மூலிகை போத்தலொன்றை வைப்பதற்கான பெட்டியொன்றிற்குரிய அலங்காரமொன்றைத் திட்டமிட்டு, அதற்குப் பொருத்தமான பெயரொன்றையும் இடுக.
10. "பிள்ளைகள் ஒரு நாட்டின் வளமாவர்" என்ற தலைப்பில் அழகிய சுவரொட்டி ஒன்றை நிர்மாணிக்குக.

2017

8. "நிலாமுகம்" என்ற பெயரிலான சிறுவர் நூல் ஒன்றுக்கான மேலட்டை ஒன்றைத் திட்டமிடுக.
9. "டெங்குவை இல்லாதொழிப்போம்" என்ற தலைப்பிலான சுவரொட்டி ஒன்றைத் தயாரிக்குக.
10. பாடசாலையின் வருடாந்த சித்திரக் கண்காட்சிக்கான அலங்கார அழைப்பிதலொன்றை நிர்மாணிக்குக.

2018

8. "சிறுவர் ஓவியர்" என்ற பெயரில் வெளியாகும் சிறுவர் நூலொன்றுக்கான மேலட்டையொன்றை நிர்மாணிக்குக.
9. "கற்ற நற்கலைகளே என்றும் நிலைத்திருக்கும்" என்ற தலைப்பில் கல்வியின் பெறுமதியை விளக்கும் விதத்தில் அழகிய சுவரொட்டியொன்றை நிர்மாணிக்குக.

www.lkedu.lk

10. "அம்மா" என்ற தலைப்பில் எழுதப்பட்ட கவிதையொன்றுக்கேற்ற கருத்தைப் புலப்படுத்தும் பொருத்தமான வர்ணச் சித்திரமொன்றைத் திட்டமிடுக.

2019

8. மரநடுகையின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் "பசுமையான நாடு" எனும் தலைப்பிலான வர்ணச் சுவரொட்டியொன்றை நிர்மாணிக்குக.
9. உங்கள் பாடசாலையின் கலைக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்படவுள்ள சிறுவர் சித்திரக் கண்காட்சி ஒன்றிற்கான அழைப்பிதழ் ஒன்றை வடிவமைக்குக
10. "எமது பாரம்பரியம்" என்ற தலைப்பில் விமர்சனரீதியாக எழுதப்பட்ட நூல் ஒன்றிற்கான மேலட்டையை வடிவமைக்குக.



குறிப்புகள்...

www.lkedu.lk